நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை– 5

ந.க.எண் 15940 /ப்பி4/2016 நாள் 25.07.2017

## சுற்றறிக்கை

பொருள்:– மாநகராட்சி/ நகராட்சி–நகரமைப்புப் பணி– கட்டிட அனுமதி வழங்குவது – களப்பணி ஆய்வு அறிக்கை – கால அவகாசம் நடைமுறைப் படுத்துதல்– தொடர்பாக

பார்வை:– 1)நகர அபிவிருத்தித்துறை – மத்திய அரசு (UD-II Desk) கடிதம் எண் ந.க.எண் K-14011/14/2016- UD-II நாள் 5.6.2016
2)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கடிதம் ந.க.எண் 5618/MA-1/ 2017 நாள் 27.03.2017, 08.06.2017, 16.06.2017 மற்றும் 4.7.2017

****

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் மாநகராட்சிகள் சட்டம் ஆகியவற்றில் உள்ள சட்டப்பிரிவுகளின்படி மாநகராட்சிகள் / நகராட்சிகளில் நகரமைப்புப் பிரிவில் கட்டிட அனுமதிக்கான விண்ணப்பம் பெறப்பட்ட 30 தினங்களுக்குள் அனுமதி வழங்குவதோ அல்லது மறுப்பதோ செய்யப்பட்டு மனுதாரருக்கு பதில் வழங்கப்பட வேண்டும் என்ற காலவரையறை பின்பற்றப்பட்டுவருகிறது. மாநகராட்சி / நகராட்சிகளில் தற்போது வழங்கப்பட்டுவரும் பல்வேறு சேவைகள் பொது மக்களை விரைவில் சென்றடைவதற்கு ஏதுவாக இவ்வாணையரகம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட இணையதள மென்பொருள் (Urban Tree) உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

இந்த மென்பொருள் மூலம் திட்ட அனுமதி (Planning permission) மற்றும் கட்டட உரிமம் (Building license) கோரி வரப்பெறும் விண்ணப்பங்களை பரிசீலித்து ஆணையர்கள் உத்தரவு பிறப்பிப்பது தொடர்பாக பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

1) நகரமைப்பு ஆய்வர்கள் ஸ்தல ஆய்வு செய்து மேற்படி ஸ்தல ஆய்வு அறிக்கையை ஆய்வு மேற்கொண்டதிலிருந்து 48 மணி நேரத்திற்குள் மனுதாரர் மற்றும் உயர் அலுவலர்கள் அறியும் வகையில் இணையதளத்தில் பதிவு ஏற்றம் செய்ய வேண்டும்.
2) கட்டட அனுமதி வழங்கப்பட்ட பின் தரைமட்ட அளவு (Plinth Level) வரை கட்டப்பட்டதாக மனுதாரர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தவுடன் 7 நாட்களுக்குள் ஆய்வு செய்து மேற்படி ஆய்வு அறிக்கையை இணையதளத்தில் பதிவு ஏற்றம் செய்து தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

V. K 25/7/2017

நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

25/7/2017

பெறுநர்

1) அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள்
2) அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்